பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 12 2024 6 45

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மத்திய அரசு கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொண்ட வங்கி சீர்திருத்தங்களின் பயன்கள் மக்களை சென்றடைந்து வருவதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
2. பி எஸ் எல் வி –சி-51 ராக்கெட் மூலம் ப்ரோபா-மூன்று செயற்கைக்கோள்கள் இன்று மாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.
3. கனமழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் ஓரிரு நாட்களில் இயல்பு நிலை திரும்பும் என்று மாநில அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் செவிலியர் பணியிடங்கள் 100 சதவீதம் விரைவில் நிரப்பப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
5. சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் டிங் லிரன் இடையேயான ஏழாவது சுற்று ஆட்டம் ட்ராவில் முடிவடைந்தது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

வங்கி சட்டத்திருத்த மசோதா நேற்று மக்களவையில் நிறைவேறியது.

இந்த மசோதா மீதான விவாதங்களுக்கு பதிலளித்து பேசிய மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வங்கிகளை பாதுகாப்பாகவும், ஸ்திரத்தன்மையுடனும் வைத்திருப்பதே அரசின் நோக்கம் என்று தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வங்கி சீர்திருத்தங்களின் பயன்களை மக்கள் தற்போது பெற முடிகிறது என்று அவர் கூறினார்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் லாபகரமாக இயங்கி வருவதாக தெரிவித்த அவர், நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டில் 85 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் லாபம் ஈட்டியிருப்பதாக குறிப்பிட்டார்.

அமைச்சரின் பதிலுரைக்குப் பின் இந்த மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

**[]<<<>>>[]**

பி எஸ் எல் வி –சி-51 ராக்கெட் மூலம் ப்ரோபா-மூன்று செயற்கைக்கோள்கள் இன்று மாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.

ஐரோப்பிய விண்வெளி முகமையின் இந்த செயற்கைக்கோள்கள் ஸ்ரீஹரிகோட்டா சதிஷ் தவான் ஏவுதளத்திலிருந்து மாலை நான்கு மணி எட்டு நிமிடத்திற்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

பூமியிலிருந்து மிகவும் உயரமான சுற்றுவட்டப்பாதையில் இது நிலைநிறுத்தப்பட உள்ளது.

நியூஸ் ஸ்பேஸ் இந்தியா நிறுவனத்தின் மூலம் ஐரோப்பிய விண்வெளி முகமையிடமிருந்து இதற்கான ஒப்பந்தத்தைப் பெற்று வர்த்தக ரீதியாக இஸ்ரோ விண்வெளியில் இந்த செயற்கைக் கோள்களை செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சுற்றுவட்டப் பாதைக்கு சென்றவுடன் இரண்டு செயற்கைக் கோள்களாக பிரிந்து சூரியனின் க்ரோனா மற்றும் அதனை சுற்றியுள்ளப் பகுதியையும்,. சூரியனின் அனல்காற்று குறித்த தகவல்களையும் இந்த செயற்கைகோள்கள் அளிக்கும்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் செவிலியர் பணியிடங்கள் 100 சதவீதம் விரைவில் நிரப்பப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஃபெஞ்ஜல் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகக் கூறினார்.

கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 300 மருத்துவ முகாம்கள் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மா சுப்ரமணியன் ) -45---- செகண்ட்*

**[]<<<>>>[]**

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான பல திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிளுக்கு பல்வேறு உபகரணங்களை வழங்கி பேசிய அவர், பத்தாயிரத்திக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மாற்றுத்திறனாகளிகள் சுய தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப்பட்டு, அவர்களுக்கு உதவிகளை அரசு செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

மாநில அரசின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களையும் திரு காந்தி பட்டியலிட்டார்.

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டத்தில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஓரிரு நாட்களில் இயல்பு நிலை திரும்பும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.

அம்மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு விழுப்புரம் நகரில் மட்டும் 63 சதவீதம் மழை பெய்துள்ளதாகவும், நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 26 சாலைகள் சேதமடைந்ததாகவும் அவற்றில் 17 சாலைகள் சீரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசு சார்பில் அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

சாத்தனூர் அணையிலிருந்து முறையாக அறிவிப்பு செய்த பின்னரே தண்ணீர் திறந்துவிடப்பட்டதாகவும், அதன் காரணமாகவே உயிரிழப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விழுப்புரம் மாவட்டத்தில் மழைவெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 14 பேர் உயிரிழந்ததாகவும் திரு பொன்முடி தெரிவித்தார்.

இதனிடையே கனமழை எச்சரிக்கையை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில் இன்று பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மழைவெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள தமிழக அரசு கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டுமென்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பகுதியில் உப்பளம் விவசாய நிலங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மாநில அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்று கூறிய அவர், பெரும்பாலான நீர் நிலைகளில் முன் கூட்டியே தூர்வாரப்படவில்லை என்று தெரிவித்தார்.

ஒரே இரவில் ஒரு லட்சம் கன அடிக்கும் கூடுதலான தண்ணீர் சாத்தனூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்டதாலேயே 38 கிராமங்கள் பாதிக்கப்பட்டதாகவும் திரு அண்ணாமலை குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

பிரசித்திபெற்ற திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.,

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த திருவிழாவில் முக்கிய நிகழ்வான திருக்கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்ச்சி வரும் 13-ஆம் தேதி நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரவிச்சந்திரன் ) -40-- செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்கொரியாவில் அமல்படுத்தப்பட்ட ராணுவ அவசர நிலைச் சட்டம் திரும்பப்பெறப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு யூன் சுக் இயோல் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நமீபியா துணை அதிபர் **Nandi –ndaitwah** நஅந்நாட்டின் முதலாவது பெண் அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் தீவிரவாத தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதால் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்குமாறு பிரிட்டன் மக்களை அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

பால் மற்றும் உணவுப் பொருட்கள் கலப்படம் தொடர்பாக தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் நிவாரண பணிகள் குறித்து அனைத்துத்துறை அதிகாரிகளுடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு மதுசூதன ரெட்டி ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டத்தில் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் நிவாரண உதவிப்பொருட்களை நேற்று வழங்கினார்.

**[]<<<>>>[]**

பேரிடர்களுக்கு இயற்கையை குறை சொல்ல முடியாது என்றும், அவற்றுக்கு மக்கள்தான் காரணம் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே பொதட்டூர்பேட்டை நெடுஞ்சாலையில் நந்தி ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் குன்னூர் - மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் ஒற்றை காட்டு யானை முகாமிட்டிருப்பதாகவும், வாகன ஓட்டிகள் பாதுகாப்பாக செல்லுமாறும் வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மண்டல கோழிப்பண்ணை வரலாற்றில் முதல் முறையாக ஒரு முட்டையின் கொள்முதல் விலை ஐந்து ரூபாய் 90 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் டிங் லிரன் இடையேயான ஏழாவது சுற்று ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

இதுவரை நடைபெற்ற ஆறு சுற்றுகளில் இருவரும் தலா ஒன்றில் வெற்றிபெற்றுள்ளனர்.

மற்ற சுற்றுகள் ட்டிராவில் முடிவடைந்ததால் இருவரும் தலா மூன்று புள்ளி ஐந்து புள்ளிகளுடன் சம நிலையில் உள்ளனர்.